**செய்தி வெளியீடு எண்: 004** **நாள் :05.01.2015**

**தமிழ் வளர்ச்சித் துறை**

**செய்தி வெளியீடு**

தமிழ் வளர்ச்சித் துறையால் கீழ்க்காணும் விருதுகள் வழங்கப்படுகின்றன.

1. திருவள்ளுவர் விருது
2. திரு.வி.க. விருது
3. பாரதியார் விருது
4. பாரதிதாசன் விருது
5. கி.ஆ.பெ. விசுவநாதம் விருது
6. கபிலர் விருது
7. உ.வே.சா. விருது
8. கம்பர் விருது
9. சொல்லின் செல்வர் விருது
10. உமறுப்புலவர் விருது
11. ஜி.யு. போப் விருது
12. இளங்கோவடிகள் விருது

மேற்கண்ட விருதுகளைப் பெற்ற விருதாளர்களுக்கு அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் தமிழ்நாட்டிற்குள் இலவசப் பயணம் மேற்கொள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஆணையிடப்பட்டுள்ளது. இந்த இலவசப் பேருந்துப் பயண அட்டை பெற விருது பெற்றவர்கள் அரசால் வழங்கப்பட்ட விருது அரசாணை, நிழற்படம் ஆகியவற்றுடன், சென்னையில் உள்ளவர்கள், சென்னை தமிழ் வளர்ச்சி இயக்ககத்திலும், பிற மாவட்டங்களில் உள்ளவர்கள் அந்தந்த மாவட்டத்தின் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலுள்ள தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகத்திற்குச் சென்று உரியவாறு பதிவு செய்து கொண்டு அவர்கள் அளிக்கும் சான்றினைப் பெற்றுக் கொண்டு உரிய போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநர் அலுவலகம் அல்லது கிளை மேலாளர் அலுவலகத்தில் அளித்து பேருந்து இலவசப் பயண சலுகை அட்டை பெற்றுக் கொள்ளலாம். இந்த இலவசப் பயணப் பேருந்து அட்டை ஒவ்வொரு ஆண்டும் இதே முறையில் புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.

தமிழ் வளர்ச்சி இயக்குநருக்காக

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**